ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

ஏழாம் வகுப்பு - அறிவியல்

அலகு-3 நம்மைச் சுற்றியுள்ள பருப்பொருள்கள்

**I.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-**

1. கீழ்க்கண்டவற்றுள் உலோகம் எது?
   அ. இரும்பு ஆ. ஆக்ஸிஜன் இ. ஹீலியம் ஈ. தண்ணீர்

2. ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் மற்றும் சல்பர் ஆகியவை கீழ்க்கண்டவற்றுள் எதற்கான உதாரணம்?
   அ. உலோகம் ஆ. அலோகம் இ. உலோகப்போலி ஈ. மந்தவாயு

3. கீழ்க்கண்டவற்றுள் ஒரு தனிமம் மற்றும் சேர்மத்தின் மூலக்கூறைக் குறிக்கக்கூடிய எளிய மற்றும் அறிவியல் பூர்வமான முறை எது?
   அ. கணித வாய்ப்பாடு ஆ. வேதியியல் வாய்ப்பாடு
   இ. கணிதக் குறியீடு ஈ. வேதியியல் குறியீடு

4. அறை வெப்பநிலையில் திரவமாக உள்ள உலோகம் எது?
   அ. குளோரின் ஆ. சல்பர் இ. பாதரசம் ஈ. வெள்ளி

5. எப்பொழுதுமே பளபளப்பான, வளையக்கூடிய, ஒளிரும் தன்மையுள்ள தனிமம் எது?
   அ. அலோகம் ஆ. உலோகம் இ. உலோகப்போலிகள் ஈ. வாயு

**II. சரியா? தவறா? என எழுதுக:-**

1. இரண்டு வேறுபட்ட தனிமங்கள் ஒரே விதமான அணுக்களைக் கொண்டிருக்கலாம்.

2. தனிமங்கள் மற்றும் சேர்மங்கள் தூய பொருள்களாகும்.

3. அணுக்கள் தனித்து இருக்க முடியாது. அவை மூலக்கூறுகள் எனப்படும் குழுக்களாகவே உள்ளன.

4. NaCl என்பது ஒரு சோடியம் குளோரைடு மூலக்கூறைக் குறிக்கிறது.

5. ஆர்கான் வாயு ஓரணு வாயுவாகும்.

LIVEWORKSHEETS

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:-

1. ஒரு பருப்பொருளின் தனித்துக் காணப்படக்கூடிய மிகச் சிறிய துகள் ______________________.

2. ஒரு கார்பன் மற்றும் இரண்டு ஆக்சிஜன் அணுக்களைக் கொண்ட சேர்மம் __________________.

3. ______________ மின்சாரத்தைக் கடத்தும் ஒரே அலோகம்.

4. தனிமங்கள் _____ வகையான அணுக்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

5. சில தனிமங்களின் ____________ லத்தீன் அல்லது கிரேக்கப் பெயர்களிலிருந்து பெறப்படுகின்றன.

6. இதுவரை அறியப்பட்ட தனிமங்களின் எண்ணிக்கை _________.

7. தனிமங்கள் தூய பொருள்களின் __________________ வடிவம்.

8. தனிமங்களின் பெயரை எழுதும்போது முதல் எழுத்தை எப்போதுமே ______________ எழுத்தால் எழுதவேண்டும்.

9. மூன்றுக்கும் மேற்பட்ட அணுக்களைக் கொண்ட மூலக்கூறுகளை ________________ மூலக்கூறுகள் என்று அழைக்கலாம்.

10. ______________ வளிமண்டலத்தில் அதிகளவு காணப்படும் வாயு

**விடைகள்:-**

அணு　　கார்பன்டைஆக்சைடு　　கார்பன்　　ஒரே

குறியீடுகள்　　118　　எளிமையான　　பெரிய

மூவணு　　நைட்ரஜன்

LIVEWORKSHEETS